ஜெபம் பண்ணி விழித்திருங்கள்

# பரம நம்பிக்கை

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும் (சங். 143:10)

ESTD. : 1978

மலர் - 49 ஜூலை – 2026 இதழ் 7

# ஆத்துமாவை பெலப்படுத்துகிற தேவன்

(சகோதரி ரீட்டா ஏசாயா)

**ஏசாயா 41:10 – நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன். என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்.**

வாசக நேயர்களே! மீண்டுமாய் இவ்விதழ் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். கர்த்தர் நம்மை எவ்விதமாக பெலப்படுத்தி நடத்தி வருகிறார் என்பதை ஒவ்வொரு மாதமும் இந்த இதழ் மூலமாக தியானித்து வருகிறோம். துதியினால் பெலனடைந்து சத்துருக்களை மேற்கொண்ட தாவீதின் அனுபவங்களைக் கடந்த இதழிலே தியானித்தோம்.

இந்த இதழிலே சங்கீதம் 138:3ல் "என் ஆத்துமாவிலே பெலன் தந்து என்னைத் தைரியப்படுத்தினீர்" என்ற வசனத்தை தியானிக்கப் போகிறோம். சரீரம் பெலனடைவதற்கு ஆகாரத்தை உட்கொள்கிறோம் சரீரம் பெலனடைகிறது. அதுபோல ஆத்துமா பெலனடைவதற்கு "வசனம்" ஆகாரமாயிருக்கிறது. அதைக் குறித்து அப்.பேதுரு தன்னுடைய நிருபத்தில் எழுதும் போது, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பாலின மேல் வாஞ்சையாயிருங்கள் என்கிறார் (I பேது 2:3) புதிதாய் பிறந்த குழந்தை எதற்குமே கவலைப்படாது, அழாது, அதற்கு பால் மட்டுமே வேண்டும். எனவே அது அழ ஆரம்பிக்கும் போது உடனே அதற்கு பாலைக் கொடுப்பார்கள். அது அமைதியாகத் தூங்க ஆரம்பித்துவிடும். அந்த பாலின் மேல் அது அவ்வளவு வாஞ்சையாயிருப்பது போல, தேவனுடைய பிள்ளைகள் வசனத்தின் மேல் வாஞ்சையாயிருக்க வேண்டும். அதைத்தான் வெளி. 1:3ல் "இந்த தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவர்களைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்" என்று எழுதப்பட்டிருக்கிறது.

வசனத்தை வாசித்து, கேட்டு, அதிலே பெலனடைய வேண்டும். தினமும் பாலைக் குடிக்கிறவர்களாய் இருக்கக் கூடாது. அதைக் குறித்து எபி.5:12–14 வரையுள்ள வசனங்களில், நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல பாலை உண்ணத்தக்கவர்களாயிருக்கிறீர்கள் என்றும், பாலுணகிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனா யிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத் தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களை உடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்" என்று கூறப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! நாம் கர்த்தருடைய வசனத்தை வாசித்து, தேவ சமூகத்துக்குச் சென்று கேட்டு, ஆத்துமாவில் பெலனடைய வேண்டும். ஆத்துமா பெலனடையும் போது நாம் வித்தியாசமானவர்களாய் மாறுகிறோம். எனவே ஆழமான சத்தியங்களை கேட்டு தேவ பிள்ளைகள் பெலனடைய வேண்டும் . ஆத்துமா பெலனடையும் போது நாம் எப்படிப்பட்டவர்களாய் மாற்றப்படுகிறோம் என்பதை தியானிப்போம்.

### I. ஆத்துமா பெலனடையும் போது கர்த்தரை மகிமைப்படுத்துவோம்:(லுக்கா.1:46)

ஆத்துமா கர்த்தருடைய வசனத்தைக் கேட்டு பெலனடையும் போது அது எல்லா சூழ்நிலைகளிலும் தேவனை மகிமைப்படுத்தும். இங்கே மரியாள் இருந்த வீட்டுக்குள் தேவ தூதன் பிரவேசித்து அவளை வாழ்த்திக் கர்த்தருடைய வார்த்தையை அவளுக்கு அறிவிக்கிறான். இது கிரகிக்கக் கூடாத ஒரு காரியம். இவள் புருஷனுக்கு நியமிக்கப்பட்டப் பெண் "நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்" என்று சொல்லும் போது அவள் கலங்குகிறாள். "பரிசுத்த ஆவி உன்மேல் வரும் உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்" என்று தூதன் சொல்லும் போது அவள் அந்த வார்த்தைக்குத் தன்னை அர்ப்பணித்தாள். கர்த்தருடைய வார்த்தை அவளைப்

பெலப்படுத்தினது. அவள் தேவனை மகிமைப்படுத்தினாள். எத்தனையோ நிந்தைகளும், அவமானங்களும் அவளுக்கு வந்திருக்கலாம். ஆனால் அவளுக்குள் இருந்த கர்த்தருடைய வார்த்தையினால் அவள் பெலனடைந்தாள் "என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது, என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களி கூறுகிறது" என்கிறாள்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே! நாம் கர்த்தருடைய வசனத்தில் பெலப்பட்டிருப்போமானால் எத்தனை விதமான நிந்தைகள், பிரச்சனைகள், போராட்டங்கள் வந்தாலும் அவைகளால் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. மரியாள் எல்லா பாடுகளிலும் நின்று கிறிஸ்து வெளிப்பட ஒரு பாத்திரமாக விளங்கினது போல, நாமும் கிறிஸ்துவை வெளிப்படுத்தும் பாத்திரமாக திகழ்வோம்.

## II. ஆத்துமா பெலனடையும் போது நாம் சோர்ந்து போக மாட்டோம்: (IIகொரி. 4:16,17)

அடுத்தபடியாக பவுல் கர்த்தருடைய வசனத்தினால் நிரப்பப்பட்ட ஒரு தேவ மனிதன். அவர் பலபாடுகளின் நடுவிலும் பல இடங்களுக்கே சென்று கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கித்தார். எனவே கிறிஸ்துவின் அன்பை பூரணமாக அனுபவித்தவர் அவர் கர்த்தருடைய வார்த்தைகளின் மேல் ஆழமான நம்பிக்கை உள்ளவராயிருந்தபடியினால் எத்தனையோ போராட்டங்கள், பிரச்சனைகள், நிந்தைகள், வாக்குவாதங்கள் வந்தாலும் அவர் சோர்ந்து போகவே இல்லை. சரீரத்திலும் அவருக்கு பெலவீனம் இருந்தது. எதுவுமே அவரை மேற்கொள்ள முடியவில்லை. எனவே தான் அவர் "நாங்கள் சோர்ந்து போகிறதில்லை, எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும் உள்ளான மனுஷனானது (ஆத்துமா) நாளுக்கு நாள் புதிதாக்கப் படுகிறது " என்கிறார். "கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்" என்று தைரியமாய்ச் சொல்லுகிறார்.

அருமையான தேவ பிள்ளைகளே! தேவ வார்த்தையினால் நம்முடைய ஆத்துமா பெலனடையும் போது எத்தனை போராட்டங்கள், சரீர பெலவீனங்கள் வந்தாலும் நாம் சோர்ந்து போக மாட்டோம். கர்த்தர் நம் ஆத்துமாவைப் பெலப்படுத்துவார். ஆத்துமா பெலனடையும் போது தைரியம் உண்டாகும்.

## III. ஆத்துமா பெலனடையும் போது கர்த்தருக்கு காத்திருப்போம் (சங். 130:6)

கடைசியாக, ஆத்துமா பெலனடையும் போது, அது கர்த்தருக்காக காத்திருக்கும் கர்த்தருக்கு காத்திருக்கிறவர்கள் புது பெலனடைந்து கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள் (ஏசா.40:31) என்று வேதம் சொல்லுகிறது. கர்த்தருக்குக் காத்திருக்கிற அனுபவம் மிகவும் உன்னதமான ஒன்றாகும். தேவ சமூகத்தில் காத்திருக்கும் போது கர்த்தர் நம்மோடு பேசுவார், நம்முடைய குறைகளை உணர்த்துவார். நம்மை பெலப்படுத்துவார். கிருபை வரங்களை அருளுவார். நம்மை புது பெலத்தால் நிரப்புவார். அதுமாத்திரம் அல்ல அவர் வருகைக்காக நம்மை உருவாக்குவார். இது ஒரு மேன்மையான அனுபவமாகும். தேவ சமூகத்தில் வாஞ்சையோடு காத்திருப்பவர்கள் தான் அவர் வருகையில் மறுரூபமாக்கப்பட முடியும். அதற்கான இரகசியங்களை அவர் கற்றுக் கொடுப்பார். தேவ ராஜ்ஜியத்தின் மேன்மைகளைக் கற்றுக் கொடுப்பார்.

எனவேதான் தாவீது, மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதருவது போல தேவனே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது என்கிறார் (சங்.42:1) அருமையான தேவ பிள்ளைகளே! நாம் கர்த்தருடைய வருகைக்காக காத்திருக்க வேண்டும். இயேசு சீக்கிரமாய் வரப்போகிறார். அவர் வருகைக்கான அடையாளங்களெல்லாம் நிறைவேறிக் கொண்டிருக்கின்றது. உலகத்தில் பலவிதமான மாற்றங்களை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது வேடிக்கைப் பார்க்கும் காலமல்ல. நம்மை ஆயத்தப்படுத்துகிற காலம்.

தேவ சமூகத்தில் அமர்ந்திருந்து இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தப் படுவோம். ஒரு கூட்டம் ஆயத்தமாக்களை ஆயத்தப் படுத்துவோம். தேவ சமூகத்தில் காத்திருக்கும் போது தான் நம் ஆத்துமா பெலனடையும். தேவ சமூகம் ஆத்துமாவை பெலப்படுத்தி தைரியப்படுத்தும்.

அருமையான தேவ பிள்ளைகளே! என் ஆத்துமாவிலே பெலன் தந்து என்னைத் தைரியப்படுத்தினீர் என்று தாவீது சொன்னது போல, கர்த்தர் நம் ஆத்துமாவை பெலப்படுத்தி அது கர்த்தரை மகிமைப்படுத்தும் படியாகவும், பாடுகளிலே சோர்ந்து போகாதபடியாகவும், அவருடைய வருகைக்காக காத்திருக்கும் படியாகவும் அதை தைரியப்படுத்துகிறார். தேவ பிள்ளைகளே! கர்த்தரைத் துதித்து, சோர்ந்து போகாமல் அவர் வருகைக்காகக் காத்திருப்போம். தேவன் தாமே நம்மை பெலப்படுத்தி நிலைநிறுத்துவாராக!

## வாக்குத்தத்தம்

அற்பகாலம் மூண்ட கோபத்தினால்
என் முகத்தை இமைப்பொழுது உனக்கு
மறைத்தேன். ஆனாலும் "நித்திய கிருபையுடன்
உனக்கு இரங்குவேன்" ஏசா.54:8

# ஆசிரியர் கடிதம்

இனிய இயேசு கிறிஸ்துவுக்குள் அன்புள்ள பரம நம்பிக்கை பங்காளர்களே! உங்களுக்கு எங்கள் அன்பின் வாழ்த்துக்கள்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இந்த வருடத்தின் ஏழாவது மாதத்துக்குள்ளாக பிரவேசிக்கச் செய்த தேவனை நன்றியோடு துதிக்கிறோம்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இந்த இழக்கிய ஊழியத்தை கர்த்தர் அற்புதமாக நடத்தி வருகிறார். ஒவ்வொரு மாதமும் புதிய செய்திகளைக் கொடுத்து அதை எழுதி வெளியிட கிருபைக் கொடுத்து நடத்துகிறார். அவருக்கே மகிமை உண்டாவதாக. கடந்த மாதம் 21ம் தேதி நம்முடைய அருமை போதகருடைய 76வது பிறந்தநாள் அன்று ஞாயிற்றுக் கிழமையானதால் தேவ சமூகத்தில் கர்த்தரை மகிமைப்படுத்த கர்த்தர் கிருபை செய்தார். ஒருசில கஷ்டப்பட்ட தேவ பிள்ளைகளுக்கு ஆகாரம் கொடுத்து அந்த நாளை நினைவு கூற தேவன் கிருபை செய்தார். அவருக்கே மகிமையுண்டாவதாக!

கடந்த மாதத்திலே "நான் உன்னை மறப்பதில்லை" (ஏசா.49:15) என்ற வசனத்தைக் கர்த்தர் வாக்குத் தத்தமாகக் கொடுத்தார். அதன்படியே கடந்த மாதத்தில் ஏற்பட்ட போராட்டங்கள், வியாதிகள் எல்லாவற்றிலும் அவர் மறவாமல் கூட இருந்து பெலப்படுத்தினார்.

வழக்கமாக நடக்கிற எல்லா ஊழியங்களும் தவறாமல் நடைபெறுகிறது. இந்த பத்திரிகை ஊழியத்தினிமித்தமாக நீங்கள் பயன்பெறுவீர்கள் என்றால் உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள். அவர்கள் விலாசங்களை அல்லது போன் நம்பரை அனுப்புவீர்கள் என்றால் அவர்களுக்கும் அனுப்புகிறோம். தொடர்ந்து எங்களுக்காகவும் எங்கள் ஊழியங்களுக்காகவும் மாம்பலத்தில் சீக்கிரமாக ஒரு ஆராதனை ஸ்தலம் கிடைக்கவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

இப்படிக்கு
உங்கள் அன்பு சகோதரி
**ரீட்டா ஏசாயா**

## அறிவிப்பு

வாசக நேயர்களே! உங்கள் அன்புக்காகவும் ஜெபத்துக்காகவும் நன்றி செலுத்துகிறோம். தொடர்ந்து கர்த்தருடைய பெரிதான கிருபையினால் பாஸ்டர் அவர்கள் விட்டுச் சென்ற எல்லா ஊழியங்களையும் செய்து வருகிறோம். 'சிப்பியில் முத்து' வினா – விடை அனுப்புகிற தேவ பிள்ளைகளும் காணிக்கை அனுப்புகிற தேவ பிள்ளைகளும் தயவு செய்து பழைய விலாசத்தை மாற்றி புது விலாசத்தில் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் ஜெபக் குறிப்புகளை இதே விலாசத்திற்கு அனுப்புங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம் நன்றி!

எங்கள் புதிய விலாசம்

**Sis. Rita Isaiah**
**214/2, AVA Palace,**
**Flat G1, V.G.N. Padma Avenue,**
**Kolapakkam**
**Chennai - 600 128.**
**Ph : 9384710267, 9789893830**

உங்கள் ஜெபமும் ஆதரவும் எங்களுக்குத் தொடர்ந்து இருப்பதாக! நன்றி.

*Jesus Christ is coming very soon! Are you ready?*

# PARAMA NAMBIKKAI

(Estd. 1978)

WATCH AND PRAY

Watch! Pray!! Be Holy!!!

JULY - 2026

# LIVE HOLY AND GODLY

Live Holy and Godly Since everything will be destroyed in this way, what kind of people ought you to be? You ought to live holy and Godly lives. - 2 Peter 3:11

Peter reminds Christians that the physical universe and all its earthly accomplishments are temporary and will eventually be destroyed. Perspective on God's plan for creation motivates us to live holy and Godly lives. The day of the Lord will come. At that time, everything terrestrial and everything celestial will dissolve, what kind or sort of person am I supposed to be. Think about the kind of person you should be since God will dissolve the universe. Living a holy and godly life involves making intentional choices that reflect God's character. This includes practicing kindness, integrity, and love in your interactions with others. Regular prayer, studying the Bible, and engaging in community service can help you grow spiritually. Additionally, being mindful of your thoughts and actions, and striving to embody compassion and grace in everyday situations, will align your life with the teachings of this verse.

*Please 'Pray' for a permanent place in Mambalam for our Parama Nambikkai Ministries and obey as God says for this ministry to help us. You can download our messages every month through e-magazine from my website www.risaiah.com to show others as you are blessed.*

www.risaiah.com Pastor R. Isaiah

First, live holy. The word holy means separate the lives unto God. Conduct the lives devoted to God, not to yourself. Paul said, for God did not call us to uncleanness, but in holiness.-1 Thessalonians 4:7. Present your bodies as a living sacrifice, holy and acceptable to God. Many people think that holiness is something that you are supposed to achieve on your own. They think it is a matter of self effort applied against bad behavior or habits. It's not that you have to clean up your act before God. You need to clean out your heart. Without holiness no one will see the Lord. And we could not make ourselves holy. And so Jesus suffered and died on the cross to make us holy, to cleanse us from our sins, and to present us before himself as part of his radiant church, without any stain or blemish. Only Christ can change your heart. And only when Christ has changed your heart will you find yourself growing in holiness. Commit yourself again to God and to a life of holiness. Holiness is part and parcel of the Christian life. God calls you to be holy, and we should all be growing in holiness, every day of our lives. Holiness fosters intimacy with God and builds spiritual strength and stability. Holy living makes us useful and

**Who remembered us in our low estate for his mercy endureth for ever - (Psa. 136:23)**

effective for God's purposes. Our holy life causes people around us to glorify God. Holiness builds peace with God. A holy life pleases God and produces fruit.

Secondly, people who live in light of the dissolution of the universe will live Godly lives. Godliness is devotion towards God. Godliness is the practice of aligning one's character, thoughts, and actions with the divine. It is an inward devotion that transforms outward behavior, producing a life of integrity, compassion, and spiritual purpose. Ultimately, true Godliness reflects a heart that deeply honors and imitates the Creator. Godliness will make a difference in your life and also enable you to make a difference in the lives of those around you.

Godliness simply means living for God. And how do you live for God? By doing exactly what Paul said in 1 Timothy 4:12. Let no man despise thy youth; but be thou an example of the believers, in word, in conversation, in charity, in spirit, in faith, in purity. When you live for God, you will see a difference in your life in your job, in your family, in your finances, and in your health. As a Christian, your attitude should be that of watching for and even striving for the coming of the day of God. Peter instructs those to whom he is writing is it necessary for you to be in holy conduct and Godliness.

His divine power has given us everything needed for life and Godliness. Godliness is being faithful to our calling by doing the good works. Our good works demonstrate the salvation and they help our faith continue to grow. Abraham demonstrated absolute faith in God. Godly works are the evidence of genuine faith. Jesus is the essence and wellspring of Godliness. He lived in Godliness, and now as ascended Lord he gives us Godliness. Godliness is not an external but is the inner power to live a Godly life. Train yourself for Godliness. Reject bad doctrine. Dine on good teaching. Say no to ungodliness and worldly passions, and to live self-controlled, upright and Godly lives, as we await the coming of our Lord Jesus Christ. True Godliness engages our affections and awakens within us a desire to enjoy God's presence and fellowship. It produces a longing for God himself. The word of God not only insists on the certainty of Christ's return in glory and judgment, but it also insists that the certainty of the day of God must have a very practical impact on our lives. Let us be sure to conduct ourselves in a Godly way. - Amen

**-Dr. S.Jehoashan Kingsly** Ph.D.,

## ATTENTION PLEASE

Your thanks giving testimonies, offerings, gifts, money orders are all welcomed, accepted and used for His Victorious ministry. Money may be sent through **net banking as in :**

**PARAMANAMBIKKAI MINISTRIES**
**(in India only)**
**CBS Code : 00073,**
**IFS Code: IDIB000A031**
**Current A/c. No.980288648**
**Indian Bank, Ashok Nagar, Chennai-83**

To My address:

Sis. Rita Isaiah
214/2, AVA Palace,Flat G1, V.G.N. Padma Avenue,
Kolapakkam, Chennai - 600 128.
**Ph : 044-24710267**
**Cell : +91 9384710267, 9789815830**
E-mail : pritaisaiah@gmail.com
Fax : 91-044-24710267
**Our website : www.risaiah.com**

# உபத்திரவத்திலே பொறுமையாயிருந்து ஜீவகிரீடத்தைப் பெறுவோம்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக! கடந்த மாதம் முழுவதும் கர்த்தர் நம்மை கண்மணியை போல் காப்பாற்றினார். இந்த மாதத்திலும் பரம நம்பிக்கை இதழின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைக்கு நாம் தியானிக்கப்போகிற தேவனுடைய வார்த்தை என்னவென்றால், "உபத்திரவத்திலே பொறுமையாயிருந்து, விசுவாசத்தைப் பற்றிக்கொண்டு, ஜீவகிரீடத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்" என்பதாகும்.

பிரியமானவர்களே, உபத்திரவத்தைச் சகிப்பது என்பது, சோதனைகள் வரும்போது வெறுமனே கைகளைக் கட்டிக்கொண்டு காத்திருப்பது அல்ல. அது விசுவாசத்தை இழக்காமல், மன உறுதியோடு சோதனைகளை எதிர்த்து நிற்பதாகும்.

## 1. யோபு எல்லாவற்றையும் இழந்தபோதும் பொறுமை :

ஒரே நாளில் தன் சொத்துக்கள், பிள்ளைகள் மற்றும் ஆரோக்கியம் என எல்லாவற்றையும் யோபு இழந்தார். ஆனால் யோபு தேவனை ஒரு குறையும் கூறவில்லை. யாக்.5:11 நாம் "இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்" யோபின் வாழ்க்கையின் உபத்திரவம் கொடூரமாக இருந்தது. உடல் முழுவதும் கொப்புளங்கள் தோன்றி, சாம்பலில் அமர்ந்து ஓட்டினால் தன்னை சுரண்டிக் கொண்டிருந்த போதும், யோபு சோர்ந்து போகவில்லை. அவனுடைய மனைவி "தேவனைத் தூஷித்து ஜீவனை விடு" என்று கூறியபோதும், யோபு : "தேவனுடைய கையில் நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ?" என்றார் (யோபு. 2:10)

சோதனை நேரத்தில் நாம் காட்டும் பொறுமை நமது விசுவாசம் உண்மையானது என்பதை நிரூபிக்கிறது. (I பேதுரு 1:6–7) "அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசுகிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும், மகிமையுமுண்டாகக் காணப்படும். இந்த தற்காலிகமான உபத்திரவத்தை யோபு பொறுமையோடு சகித்ததினால் தேவன் அவர் இழந்த யாவற்றையும் இரண்டு மடங்காக திருப்பி கொடுத்தார்."

## 2. யோசேப்பு துரோகத்திலும், சிறையிலும் பொறுமை :

யோசேப்பு தன் சொந்த சகோதரர்களாலேயே அடிமையாக விற்கப்பட்டார், தன் தகப்பனின் அன்பை இழந்தார், வீட்டை இழந்தார். ஒரு அடிமையாய் விற்கப்பட்டார். தன் தகப்பனிடத்தில் செல்ல மகனாக வளர்ந்த யோசேப்பு, சிறுவயதிலேயே ஒரு அடிமையாக மாறினான். அது மட்டுமல்ல, தான் செய்யாத குற்றங்களுக்காக பல வருடங்கள் எகிப்து நாட்டில் சிறையில் அடைப்பட்டார். 13 வருடங்களுக்கும் மேலாக அடிமைத்தனமும் சிறைவாசமும் நீடித்தபோதும், யோசேப்பு தேவனை குறைசொல்லவில்லை. அவரிடத்தில் கசப்புக் கொள்ளவும் இல்லை. இந்த தீமையையும் தேவன் நன்மையாக மாற்றுவார் என்ற நம்பிக்கை தான் பொறுமை. பிற்காலத்தில் யோசேப்பு தன் சகோதரர்களை நோக்கி; "நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ அதை நன்மையாக முடியப்பண்ணினார்" என்றார். (ஆதி 50:20) நாம் சந்திக்கும் கஷ்டங்கள் எவ்வளவு பெரியதாகத் தோன்றினாலும் அவை அனைத்தும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே. (II கொரி. 4:17,18) "மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது " யோசேப்பின் பொறுமை மற்றும் தேவன் மேலுள்ள விசுவாசம் பிற்காலத்தில் மிகப்பெரிய ஆசீர்வாதத்திற்குள்ளாக தன் குடும்பம் முழுவதும் காக்கப்படுவதற்கு வழிசெய்தது.

**3. அப்.பவுல் அதிக பாடுகள், துன்புறுத்தலிலும் பொறுமை :** அப்.பவுல், பலமுறை சாட்டையடிப் பெற்றார், சிறையில் அடைக்கப்பட்டார். கப்பல் சேதத்தில் தவித்தார். மேலும், அவர் உடலில் ஒரு முள் போன்ற பெலவீனம் தொடர்ந்து இருந்தது. ரோமர் 12:12 "நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்" என்று கூறுகிறார். பவுல் தன் பலவீனத்தை நீக்குமாறு மூன்றுமுறை ஆண்டவரிடம் ஜெபித்தார். ஆனால் தேவன் "என் கிருபை போதும்" என்று கூறியபோது, பவுல் வருத்தப்படவில்லை. மாறாக கிறிஸ்துவினுடைய வல்லமை தன்மேல் தங்கும்படி, தன் பலவீனங்களைக் குறித்துச் சந்தோஷமாக மேன்மைப் பாராட்டினார். அப்போஸ்தலனாகிய பவுல் தனக்கு வந்த கஷ்டங்களை "இலேசான உபத்திரவம்" என்றும் "அதிசீக்கிரத்தில் நீங்குவது" என்றும் கூறுகிறார். நம் சொந்த பலத்தால் உபத்திரவங்களை சகிப்பது கடினம். ஆனால் நாம் ஜெபிக்கும்போது கர்த்தர் மேல் நம் பாரத்தையெல்லாம் வைக்கும்பொழுது (ஏசாயா 40:29–31) சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தை பெருகப்பண்ணுகிறார். I கொரி 10:13 "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையல்லாமல் வேறு சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையை தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்கு தப்பும்படியான போக்கையும் உண்டாக்குவார். ஒரு தகப்பனுக்கு தன் பிள்ளையால் எவ்வளவு எடையைத் தாங்க முடியும் என்பதை அறிவார். அதுபோலவே, தேவன் நம் பலவீனங்களை அறிந்திருப்பதால், நாம் தாங்கக்கூடிய சோதனைகளை அனுமதிக்கிறார். அதிலிருந்து தப்பிப்பதற்கான வழியையும் அவரே நமக்கு காட்டுகிறார் "

பிரியமான தேவ பிள்ளைகளே, இந்த உலகத் துன்பங்களை விசுவாசத்தோடு சகித்து ஜெபிப்பவர்களுக்கு தேவன் நித்திய ஜீவனாகிய "ஜீவ கிரீடத்தை" பரிசாக வழங்குவார். யாக் 1:12 சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளம்பினபின்பு, கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரிடத்தை பெறுவான். நாமும் நம் ஜீவியக் காலத்தில் நமக்கு நேரிடும் சோதனைகளை பொறுமையோடு சகிக்க கற்றுக்கொள்ளுவோம்! அப்பொழுது தேவன் நமக்காக வைத்திருக்கும் ஜீவ கிரிடத்தை பெற்றுக்கொள்வோம்! தேவன்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!

**உங்கள் பிரயோஜனத்துக்காக**
**யூடியூப் (You Tube) :-**
Paramanambikkai Messages
Paramanambikkai Songs
Paramanambikkai Ministries
**பாருங்கள்**

## இடத்திற்காக

மாம்பலத்தில் பரம நம்பிக்கை ஊழியங்களுக்கான ஒரு நிரந்தர இடத்தைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சீக்கிரமாக தர, அதிசயம் நடக்க, தேவ நாமம் மகிமைப்பட, பரிசுத்தாவியானவர் ஜெயம் தர ஜெபித்துக் கொள்ளுங்கள். – **www.risaiah.com**

## உங்கள் கவனத்திற்கு

உன்னதப்பாட்டு – விளக்கவுரை சகோதரி ரீட்டா ஏசாயா எழுதியதைக் கொண்டு பரிசுத்தாவியானவர் கிரியை செய்து ஆத்துமாக்கள், சபைகள், தேவனுடைய நாளுக்கு ஆயத்தப்பட, நற்கிரியைகளைச் செய்ய ஸ்தோத்திரத்தோடு ஜெபித்துக் கொள்ளுங்கள். புத்தகம் தேவைப்படுவோர் **'Word of Christ'** விற்பனையாளரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாங்கி பயனடையுங்கள் **(Phone Number 044-26613242)**. பரமநம்பிக்கை ஊழியங்களுக்காக, விசுவாசிகளின் சுவிசேஷ ஐக்கியத்திற்காக ஸ்தோத்திரத்தோடு ஜெபித்துக் கொள்ளுங்கள்.

*www.risaiah.com இணையதளம் மூலமாக அநேகர் மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டு, புதுப் பிக்கப்பட (இரட்சிப்பு) இந்நாட்களில் "ஜெபியுங்கள்". நீங்களும் இந்நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ள இச்செய்தியை உங்களுக்கு பகிர்ந்து கொள்ளுகிறேன்!* –போதகர் ஆர்.ஏசாயா

## சிப்பியில் முத்து

**கடந்த மாத சிப்பியில் உள்ள முத்துக்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | ஆதாம் | – ஆதி. 2:21 |
| 2. | ஆபிரகாம் | – ஆதி. 15:12 |
| 3. | யாக்கோபு | – ஆதி. 31:40 |
| 4. | அகாஸ்வேரு | – எஸ்தர். 6:1 |
| 5. | சோப்பார் | – யோபு 11:19 |
| 6. | நேபுகாத் நேச்சார் | – தானி 2:1 |
| 7. | தரியு | – தானி 6:18 |
| 8. | யோனா | – யோகா 1:5 |
| 9. | சீஷர்கள் | – லூக்கா 22:45 |
| 10. | ஐத்திரு | – அப்.20:9 |

**கடந்தமாத சிப்பியில் உள்ள முத்துக்களைச் சரியாக கண்டெடுத்தவர்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | சகோ.சரோஜினி கோயில்பிச்சை | – பாளையங்கோட்டை |
| 2. | சகோ. பிரேமா ஜெயசேகர் | – வானகரம் |
| 3. | சகோ. எசேக்கியேல் குமரன் | – புளியந்தோப்பு |
| 4. | சகோ. தங்கம் ஐசக் | – வேலூர் |
| 5. | சகோ. ரதி ஜாய்ஸ் | – கே.கே.நகர் |
| 6. | சகோ. எஸ்தர் பானு | – பொழிச்சலூர் |
| 7. | சகோ. ராதா | – பெருமாள்புரம் |
| 8. | சகோ.வசந்த் கமாலியேல் | – சௌதி அரேபியா |
| 9. | சகோ.மெர்ஸி கிங்ஸ்லி | – கொளப்பாக்கம் |
| 10. | சகோ. எமிமா | – பொழிச்சலூர் |
| 11. | சகோ. புனிதா அசரியா | – அண்ணா நகர் |
| 12. | சகோ. லில்லி புஷ்பம் | – மாம்பலம் |
| 13. | சகோ. சித்ரா | – பெங்களூர் |
| 14. | சகோ. மேரி புஷ்பம் | – துரைபாக்கம் |
| 15. | சகோ. ரெஜினா மேரி | – பெருமாள்புரம் |
| 16. | சகோ. தங்கத்தாய் | – பெருமாள்புரம் |
| 17. | சகோ. சிப்போராள் எபனேசர் | – மாம்பலம் |
| 18. | சகோ. பெர்சிஸ் | – வேளச்சேரி |
| 19. | சகோ. எஸ்தர் டேவிட் | – கொளத்தூர் |
| 20. | சகோ. ஜெபா பெனியேல் | – எம்.ஜி.ஆர். நகர் |
| 21. | சகோ. ரெஜினா வின்சென்ட் | – பெங்களூர் |
| 22. | சகோ. பாலின் அன்பழகன் | – மயிலாப்பூர் |
| 23. | சகோ. வைலட் பியூலா | – பெருமாள்புரம் |
| 24. | சகோ.ஷேரன் நிர்மல்குமார் | – திருப்பத்தூர் |
| 25. | சகோ. ஞானஜோதி | – மதுரை |
| 26. | சகோ. பவித்ரா | – திருவண்ணாமலை |
| 27. | சகோ. இராஜகுமாரி | – எம்.ஜி.ஆர்.நகர் |
| 28. | சகோ. சுலோச்சனா | – துபாய் |
| 29. | சகோ. மார்கிரேட் ஜோ | – கோவை |
| 30. | சகோ. எப்சி இம்மானுவேல் | – எம்.ஜி.ஆர்.நகர் |
| 31. | சகோ. அருணா | – வண்டலூர் |
| 32. | சகோ. லிடியா | – எம்.ஜி.ஆர்.நகர் |
| 33. | சகோ. கவிதா | – திருவண்ணாமலை |

உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டாக, சரியான முத்துக்களை முயற்சித்து எடுத்துத் தந்த உங்களுக்கு "வரிசை பிரகாரம் முதலில் பதில் அனுப்புபவர்கள் வரிசைப் படுத்தப்படுகிறீர்கள்", உங்களுக்கு எங்கள் அன்பான பாராட்டுக்கள்! சரியான முத்துக்களை எடுக்க முடியாதவர்களும் இவ்விதழிலே "முயற்சித்துப் பாருங்கள்." வெளிநாட்டு, உள்நாட்டு வாசகர்கள் முத்துக்களை isaiahr@hotmail.com இ-மெயிலிலும் அனுப்பலாம். ஒவ்வொரு மாதமும் 20-ம் தேதிக்குள் பதில் எழுதியனுப்பி எங்களை சந்தோஷப்படுத்துங்கள்.

## இம்மாத சிப்பிகள்

1. யாருடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது ?
2. போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும் என்றது யார் ?
3. உங்கள் வார்த்தைகளை என் ஆத்துமா தொடமாட்டேன் என்கிறது என்றது யார் ?
4. சாகத்தக்கதாய் யாருடைய ஆத்துமா விசனப் பட்டது ?
5. அவளைத் தடுக்காதே அவள் ஆத்துமா துக்கமாயிருக்கிறது என்றவன் யார் ?
6. நான் உபவாசத்தால் என் ஆத்துமாவை உபத்திரவப் படுத்தினேன் என்றது யார் ?
7. உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் என்றது யார் ?
8. திரும்பும் கர்த்தாவே என் ஆத்துமாவை விடுவியும் என்றது யார் ?
9. என் ஆத்துமா ஜீவனை ஆரோசிக்கிறது என்றது யார் ?
10. என் ஆத்துமாவை காப்பாற்றி என்னை விடுவியும் என்றது யார் ?

குறிப்பு: உங்களுக்கு தெரிந்த மக்களுக்கு நமது பத்திரிகையை வாசிக்க, அறிமுகப்படுத்த எனது **www.risaiah.com "E-Magazine'** சென்று கீழ் இறக்கம் **(Down Load)** செய்து பெற்றுக் கொள்ளுமாறு தெரியப் படுத்துங்கள். அந்தந்த மாதத்திற்கு உரியது மட்டும் கீழ் இறக்கம் செய்யலாம் **(Download)** தொடர்ந்து எங்களுக்காக ஜெபியுங்கள். **ஆத்துமாக்கள் சாந்தி சமாதானம் அடைவார்களாக!** புதிய விலாசங்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

**PRINTED BOOK** Book-Post
(Private Circulation Only)

To

If undelivered return to :
**Parama Nambikkai**
P.B. No.3276, Chennai - 600 033, South India.

**காணிக்கை ரூ.50.00**

Printed by Mr. Devavaram, Meipporul Achakam, 278, K.H. Road, Ayanavaram, Chennai - 600 023.
Published and editored, Owned by Sis. Rita Isaiah from at 23, Kodambakkam Road, West Mambalam, Chennai-33. for Paramanambikkai Ministries Trust.